JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No. சிசி.160/2020
PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரியப்பன் | தாலுகா | வீ.கே.புதுார் |
| தந்தை பெயர் | அழகு | தொழில் | கூலி |
| கிராமம் | கீழசுரண்டை | வயது | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 26.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது கீழ சுரண்டையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சாட்சி அழகு என்ற அழகையா என் அப்பா. என் அப்பாவை அடித்து போட்டதாக எனக்கு போன் செய்தார்கள். நான் சென்று பார்த்தபோது என் அப்பா இரத்தம் வந்து கிடந்தார். யார் என்அப்பாவை அடித்தது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுக்கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 09.09.2019ம் தேதியன்று 20.30 மணிக்கு ஆஜர் எதிரி பட்டியல் சாட்சி 2 என் அப்பாவை பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. என் அப்பாவை அடித்து காயப்படுத்தினார் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு கொலைமிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு ஏற்பட்ட காயத்திற்கு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல, எதிரி மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்துகொண்டு இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi